**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் -2022**
**-----------------------------------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அலுவலகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அலுவலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அலுவலகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அலுவலகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அலுவலகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் வாகன படி செலவினம் ரூபா 2,383,333 ஆக இருந்த போதிலும் ரூபா 2,433,633 என கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, வாகன படி செலவினம் ரூபா 50,300 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தொடர்பான அட்டுறு செலவினங்கள் பற்றிய சரியான தகவலைப் பெறக்கூடிய எந்த அதிகாரியும் இல்லாததால் 2021 திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய சில அட்டுறு செலவினங்கள் 2022 ஆம் ஆண்டின் அட்டுறு செலவினங்களின் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ii) | 2021 திசெம்பர் மாதம் தொடர்பான தலைவர் மற்றும் ஏனைய ஆணையர்களுக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 169,840 மாதாந்த படி மீளாய்வாண்டின் செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டது, எனவே மீளாய்வாண்டின் மாதாந்த படி செலவினம் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தொடர்பான அட்டுறு செலவினங்கள் பற்றிய சரியான தகவலைப் பெறக்கூடிய எந்த அதிகாரியும் இல்லாததால் 2021 திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய சில அட்டுறு செலவினங்கள் 2022 ஆம் ஆண்டின் அட்டுறு செலவினங்களின் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iii) | 2021 ஆம் ஆண்டிற்கான செலவினங்களின் 8 உருப்படிகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 196,711 மீளாய்வாண்டின் செலவினங்களாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக, அந்த ஆண்டின் மிகையானது கணக்குகளில் இருந்த தொகையை விட குறைவாக இருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் தொடர்பான அட்டுறு செலவினங்கள் பற்றிய சரியான தகவலைப் பெறக்கூடிய எந்த அதிகாரியும் இல்லாததால் 2021 திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய சில அட்டுறு செலவினங்கள் 2022 ஆம் ஆண்டின் அட்டுறு செலவினங்களின் கணக்கீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டில் இரண்டு வாகனங்கள் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் அலுவலகத்திற்கு 2 வாகனங்கள் ஒப்படைக்கப்பட்ட போதிலும் பெறுமதியை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் கணக்கீடு | வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்ய முடியாதிருந்தது என தெரிவிக்கப்பட்டது. | |
| (v) | அட்டுறு செலவின பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் தொடக்கத்தில் ரூபா 3,843,088 அட்டுறு செலவினங்கள் இருந்தன, மேலும் அந்த ஆண்டில் ரூபா 67,183 அட்டுறு செலவினங்கள் திரண்டிருந்த போதிலும் திரண்ட பெறுமதி தொடர்பான ஏனைய குறிப்பு பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை . மேலும், ஆண்டின் போது ரூபா 3,446,513 தொகையான அட்டுறு செலவினங்கள் தீர்க்கப்பட்டு, ஆண்டின் இறுதியில், ரூபா 463,758 அட்டுறு செலவினங்களாகக் காட்டப்பட்டது, ஆனால் மீளாய்வாண்டின் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படுவதற்குப் பதிலாக அந்தத் தொகை தேறிய சொத்துக்களில் சேர்க்கப்பட்டது. | இது போன்ற வகைப்படுத்தல் பிழைகள் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

**1.5.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| அங்கீகரிகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் தெடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீடுகளுக்கான அலுவலகத்திலிருந்து மீள்நிரப்புச் செய்யப்பட வேண்டியிருந்த ரூபா 663,015 தொகை மீளாய்வாண்டில் அந்த அலுவலகத்திலிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தேறிய சொத்துக்களில் இருந்து கழிக்கப்பட்டது, இதனால் அத் தொகையால் தேறிய சொத்துக்கள் குறைவடைந்துள்ளன. மேலும், உரிய தொகையை பதிவழிப்பதற்கான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு தொடர்பாக பெறப்பட வேண்டிய ரூபா 663,015 தொகையான காசோலை 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்டதுடன் அதன் கணக்கீடு தொடர்பாக நீதி அமைச்சின் கணக்காளரிடம் கேட்கப்பட்டது. அமைச்சு வழங்கும் நிதியில் ஏனைய பெறுவனவுகள் சேர்க்கப்பட்டால், கட்டுநிதிக் கணக்கு பிழையாக உள்ளதால், காசோலை அமைச்சிற்கு அனுப்பப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பேரேட்டு கணக்குகளில் உள்ள பெறவேண்டிய பாதுகாப்பு செலவினக் கணக்கின் மீதி திரண்ட நிதிக்கு மாற்றப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | இழப்பீடுகளிற்கான அலுவலகத்தில் இருந்து உரிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | அலுவலகத்தால் பயன்படுத்தப்படும் வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் நுகர்வு சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் நுகர்வு சோதனையை விரைவில் மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 பெப்ரவரி 09 ஆம் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2019 மே 31 ஆம் திகதிய 13/2008 (v) ஆம் இலக்க திருத்தப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையை மீறி இரண்டு அதிகாரிகளுக்கு ரூபா 47,995 எரிபொருள் படி மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபா 254 ஆக இருந்த போது ரூபா 338 ஆக கணிப்பிடப்பட்டு ஏப்ரலில் ஒரு அதிகாரிக்கு ரூபா 12,180 மேலதிக படிகள் செலுத்தப்பட்டன. | எரிபொருளின் விலையை தவறாகக் கணிப்பீடு செய்ததன் காரணமாக செலுத்தப்பட்ட மேலதிக எரிபொருள் படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட்டு அறிக்கையிடுவதற்காக பதிவு செய்யப்பட்டது. தவறான கொடுப்பனவான ரூபா 12,180 தொகை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிற்கு தெரியப்படுத்தி அறவிடப்பட்டு அறிக்கையிடுவதற்காக பதிவு செய்யப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கை களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட பிஈ/சீஓபி/பிஓஎல்ஐ/சுற்ற றிக்கை மற்றும் 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி1/2015 பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி | அலுவலகத்தில் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி பெறும் நான்கு உத்தியோகத்தர்கள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறி ஒதுக்கீட்டு வாகனங்களை பயன்படுத்தியிருந்ததுடன் போக்குவரத்து படி பெறுகின்ற இரண்டு உத்தியோகத்தர்கள் வட மாகாணத்தில் 2022 சனவரி 25 ஆம் திகதி முதல் பெப்ரவரி 1 வரை இடம்பெற்ற நடமாடும் சேவையில் | போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி பெறும் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீட்டு வாகனங்களை வழங்கக் கூடாது எனவும், உலகளாவிய கொவிட் தொற்றுநோய்களின் போது நடமாடும் சேவை இருக்கும் வேளையில், 2022 சனவரி 24 இல் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில், 06/2022 ஆம் இலக்க பத்திரத்தில் விசாரணைக் குழுக்களின் தலைவர்களாகப் பணியாற்றிய உத்தியோகத்தர்களுக்கு | சுற்றறிக்கை களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பங்குபற்றுவதற்கு ஒதுக்கீட்டு வாகனங்களை பயன்படுத்துவதற்கு இடமிருந்த போது தனியார் கம்பனியொன்றின் இரண்டு கார்களை வாடகைக்கு பெற்றிருந்ததுடன் அதற்காக அலுவலகம் ரூபா 141,860 தொகையை செலுத்தியிருந்தது. | சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம் சுகாதாரமான முறையில் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) | நி.பி. 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை . | இதுவரை இந்த அலுவலகத்தில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை என்றும் இனிவரும் காலங்களில் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 371(2) ஆ | 8 சந்தர்ப்பங்களில் அலுவலகம் பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களிற்கு ரூபா 571,730 தொகையை உப கட்டுநிதிகளாகவும் 22 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 ஐ விஞ்சியும் செலுத்தியிருந்ததுடன் 11 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 11,892,081 கூட்டுமொத்தமான உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டது, மேலும் திறைசேரியிடம் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பதவிநிலைத் தர உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதுடன், தற்போதைய இடைக்கால முற்பண வரம்பை அதிகரிக்குமாறு திறைசேரி செயற்பாடுகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 371(v) | உபகட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் பணி பூர்த்தி செய்யப்பட்டு 10 | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதில் | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாட்களுக்குள் குறித்த உப கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும், ஆனால் 14 சந்தர்ப்பங்களில், அலுவலக அதிகாரிகள் உப கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு 21 நாட்கள் முதல் 245 நாட்கள் வரையான வீச்சிலான காலப்பகுதியை எடுத்துள்ளனர். | காலதாமதம் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நி.பி. 1645(அ) | அலுவலகம் பயன்படுத்தும் வாகனங்களுக்கான சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | நீதி அமைச்சுக்கு சொந்தமான வாகனத்தின் உரிமைத்துவம் இன்னும் இந்த அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை, அந்த வாகனம் தொடர்பான சம்பவக்குறிப்பு புத்தகமும் எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. மீதமுள்ள இரண்டு வாகனங்கள் தொடர்பான சம்பவக் குறிப்பு புத்தகங்களை நாளதுவரையாக்கி புதுப்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு அறிவுறுத்தப்பட்டதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | நி.பி.1646 | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் வைத்திருக்கும் மூன்று வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஓட்ட அட்டவணை அறிக்கைகள் அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | நி.பி. 315, நி.பி. 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச | பிணை வைப்பை மேற்கொள்ள வேண்டிய அலுவலக உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் பிணைப் | பிணை வைப்பை செலுத்தும் விதம் குறித்து ஆராய்ந்து எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதிச் சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | பணத்தை வைப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2018 இன் 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) | சட்டத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது போன்ற காலதாமதங்கள் ஏற்படாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,463,248 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,466,061 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,813 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் பெறுவனவுகளில் ரூபா 8,735,756 அதிகரிப்பு, ஆளணியினர் வேதனங்களில் ரூபா 1,214,491 வீழ்ச்சி, வழங்கல் மற்றும் நுகர்வு செலவினங்களில் ரூபா 914,475 அதிகரிப்பு மற்றும் சேவை செலவினங்களில் ரூபா 8,581,574 அதிகரிப்பு என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய 2022/03 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுச் செலவினங்களின் வரம்புகள் பொது நிறுவனங்களால் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என குறிப்பிடப்பட்டள்ள போதிலும் அதற்கு முரணான செலவினங்கள் உட்பட ஐந்து பிராந்திய அலுவலகங்களுக்காக ரூபா 20,629,346 செலவினங்களை மீளாய்வாண்டின் போது அலுவலகம் மேற்கொண்டிருந்ததுடன் 274 முறைப்பாடுகள் மாத்திரமே இந்த பிராந்திய அலுவலகங்களுக்காக ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டுள்ளன. | இந்தப் பிராந்திய அலுவலகத்தை நிறுவியதன் நோக்கம் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் கவலைகளை காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு நேரடியாகச் சமர்ப்பிப்பதற்கான வசதியை வழங்குவதாக காணப்பட்ட போதிலும் இந்தப் பிராந்திய அலுவலகத்தை நடத்துவதற்கான செலவைக் குறைக்கும் நோக்கில் அதற்காக அரசாங்க கட்டிடம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களுடன் ஏற்கனவே கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மட்டக்களப்பு மற்றும் மாத்தறை பிராந்திய அலுவலகங்களுக்காக முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 150,000 மாதாந்த வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களின் குத்தகை உடன்படிக்கைகள் 2022 ஆகஸ்ட் மற்றும் யூன் மாதங்களில் காலாவதியாகியிருந்த போதிலும் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு அல்லது ஏனைய கட்டிடங்களுக்கு குடிபெயர்வதற்கு அலுவலகம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | இந்த பிராந்திய அலுவலகத்தை அரசாங்க கட்டிடத்திற்கு மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களிடம் விசாரித்தும் இதுவரை பதில் கிடைக்கவில்லை. மேலும் இந்த பிராந்திய அலுவலகத்தை அரசாங்க கட்டிடங்களுக்கு மாற்றுவது தொடர்பாக மாவட்ட செயலாளர்களுடன் மேலும் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டள்ளது. | செலவினங்களைக் குறைப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில், புலனாய்வுப் பிரிவின் ஆதரவுடன் விசாரணை நடாத்துவதற்கும், 9000 கோவைகளின் எண்ணிக்கையை நாளதுவரையாக்குவதற்கும் ரூபா 9,000,000 செலவிடுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் இந்த ஆண்டு இறுதி வரை ரூபா 20,580,368 செலவிடப்பட்டு 2389 கோவைகள் மாத்திரமே நாளதுவரையாக்கப்பட்டன. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தொகையை விட உண்மையான தொகை 226 சதவீதம் அதிகமாக இருந்ததுடன், அந்தத் தொகை சரியாக மதிப்பிடப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை, எரிபொருள் பற்றாக்குறை, பொருட்கள் மற்றும் சேவைகளினதும் போக்குவரத்துக் கட்டணங்களினதும் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாக, மதிப்பிடப்பட்ட தொகையை விட உண்மையான கிரயம் அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | செலவினங்கள் இழிவுபடுத்தப்படும் வகையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்காக அலுவலகத்தின் மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு ரூபா 148,638 தொகையை செலுத்தியிருந்த போதிலும், ஆண்டின் போது பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு முற்பணமாக ரூபா 148,638 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் 2022 ஆம் ஆண்டின் போது பரீட்சைகள் நடத்தப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை சீரான இடைவெளிகளில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகம் 2022 ஆம் ஆண்டில் வெளித்தரப்பினர் ஒருவருக்கு கட்டிட வாடகையாக ரூபா 22,377,622 தொகையை செலுத்தியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக இந்த கட்டிடத்திற்கான துப்பரவு சேவை, பாதுகாப்பு சேவைகள், சுகாதாரம், தண்ணீர் மற்றும் மின்சாரம் என ரூபா 4,620,934 தொகை செலுத்தப்பட்டிருந்தது. குறைந்த எண்ணிக்கையிலான 15 உத்தியோகத்தர்களுக்கே இந்தச் செலவினங்கள் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2023 சனவரி முதல் இந்த அலுவலகம் நீதி, சிறைச்சாலை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சிற்கு கொண்டு வரப்பட்டது, மேலும் வரி, வாடகை, மின்சாரம் மற்றும் தண்ணீர் செலவினங்கள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க செலவினங்களை இழிவுபடுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 7 மொழிபெயர்ப்பாளர்கள் காணப்பட்ட போதிலும் அவர்களில் ஒருவர் கூட நியமினம் செய்யப்படாததால், 2022 ஆம் ஆண்டில் வெளியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பத்து மொழிபெயர்ப்பாளர்களுக்கு மொழிபெயர்ப்புக் கட்டணமாக ரூபா 3,082,880 செலுத்தப்பட்டது. | மொழிபெயர்ப்பாளர்களை வேலைக்கு அமர்த்தத் தயாராக இருந்த போதிலும் புதிய ஆட்சேர்ப்புகளை நிறுத்தும் அரசாங்கத்தின் கொள்கையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய முடியாத காரணத்தினால், நீதி அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் விலை கோரப்பட்டு பொருத்தமான மொழிபெயர்ப்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரமான கொடுப்பனவின் அடிப்படையில் உரிய கோவைகள் மொழிபெயர்க்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |
| (ஆ) | அலுவலகம் நிறுவப்பட்ட நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 255 உத்தியோகத்தர்களாக காணப்பட்ட போதிலும் இந்த நிறுவனத்தின் பணி தற்போது குறைந்தபட்சம் 31 உத்தியோகத்தர்களால் நிர்வகிக்கப்படுகிறது, எனவே அவர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை திருத்துவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை நியமனம் செய்ய முடியாததால், பெரும்பாலான பணிகளை பயிலுநர்களே செய்கின்றனர். தொடர்பாடல் மற்றும் சமூக ஒருங்கிணைப்புப் பிரிவு, கண்டறிதல் மற்றும் புலனாய்வுப் பிரிவு என்பனவும் தற்போது உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட நோக்கெல்லையையே கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்த அலுவலகம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை பின்பற்றிய போதிலும் அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றி கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதென 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக்கூற்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | இது நிதிக்கூற்றுக்களில் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் கடமைகளைச் செய்தல்) சட்டத்தின் II ஆம் பகுதியின் 10 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 3 முக்கிய பிரிவுகளான கண்டறிதல் மற்றும் விசாரணை, தொடர்பாடல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிதி மற்றும் பெறுகை பிரிவுகள் நேரடியாக தொடர்புடையவையாகும், ஆனால் 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அந்த பிரிவால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் பணிகள் உள்ளடக்கப்படவில்லை. நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு இன்றியமையாத இப் பிரிவுகள் செயற்படாததன் காரணமாக நோக்கங்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கண்டறிதல் மற்றும் விசாரணை, தொடர்பாடல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய பிரிவுகளில் தலைவர்கள் இல்லாததாலும், அந்த பிரிவுகளுக்கு தொடர்புடைய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாததால், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந்த பிரிவுகளின் செயற்பாடுகள் உள்ளடக்கப்படாத போதிலும் தலைவர்கள் காணப்படாத போதிலும் அன்றாட கடமைகள் ஏனைய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டது. | நிறுவனத்தின் விரும்பிய நோக்கங்கள் அடைந்து கொள்ளப்படும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அலுவலகத்தை ஸ்தாபிப்பது தொடர்பான சட்டத்தின் முக்கிய செயற்பாடுகளில் காணாமல் போன ஆட்கள் தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களது உறவினர்களின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைப் பாதுகாத்தல் | சர்வதேச மரபுகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பாக, இடைநிலை கால நீதியை வழங்குவதன் மூலம் தேசிய நல்லிணக்கப் பொறிமுறையை அமுல்ப்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு அரை நீதித்துறை (quasi- | விசாரிக்கப்படும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆகியன உள்ளடங்குகின்றன. 2022 திசெம்பர் 31 வரை அலுவலகத்திற்குப் பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 14,988 ஆக இருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2389 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பெறப்பட்ட மொத்த முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 15 சதவீதமாக குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | judiciary) வடிவில் விசாரணை செயன்முறை தொடங்கப்பட்டது, விசாரணை நடாத்தப்படுவதற்கு தேவையான விசாரணை சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு 2022 ஆம் ஆண்டில் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க 2022 ஆம் அண்டில் விசாரணை தொடங்கப்பட்டதென தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) 2022 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ரூபா 5,425,000 பெறுமதியான 15 பணிகள் தொடர்பாக மீளாய்வாண்டில் எந்த பணியும் மேற்கொள்ளப்படவில்லை. அலுவலகத்தின் 5 பிரிவுகள் தொடர்பான 21 பணிகளுக்கு முறையான மதிப்பீடு இல்லாததால், 50 சதவீதத்துக்கும் குறைவான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுநோய் காரணமாக அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை ஆகியவற்றுக்கு மேலதிகமாக, இந்த அலுவலகத்தில் பதவியணியினர் வெற்றிடம் காணப்படுவதால் திட்டமிடப்பட்ட பணிகளை எதிர்பார்த்தவாறு மேற்கொள்ள முடியவில்லை என தெரிவிக்கப்பட்டது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுவதில் கவனமாக இருக்க வேண்டும். |

### 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி அமைச்சால் வெளியிடப்பட்ட 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டலின் அத்தியாயம் 04 இன் பிரகாரம் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அலுவலகம் அவ்வாறு செய்திருக்கவில்லை. | இதற்கு தற்போது எந்த உத்தியோகத்தரும் தேவைப்படவில்லை என்றும் இவ் விடயம் தொடர்பாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வுக் குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |